


வரிசையாகத் தாக்குதல் திட்டங்களை வகுத்துக் கொடுத்துவிட்டு மலேசியாவுக்குத் திரும்பிவிட்ட பிறகு, ஹம்பாலிக்கு ஒரு வேலை மிச்சம் இருந்தது.

எங்கே தலைமறைவாவது?

அது முக்கியமல்லவா? தன் தலை தப்பித்திருக்கும் வரைதான் திட்டங்களைச் செயல்படுத்தமுடியும். அபூபக்கர் பஷீரோ, சுங்கரோ நேரடியாக எந்த ஒரு தாக்குதல் திட்டத்திலும் ஈடுபட்டதில்லை. ஜமா இஸ்லாமியாவில் அவர்கள் நிறுவனத் தலைவர்கள். சித்தாந்த வழிகாட்டிகள். அரசியல் தலைவர்கள். தாக்குதல் போன்ற விஷயங்களிலெல்லாம் அவர்கள் தலையிட்டதே இல்லை. அனைத்தும் ஹம்பாலியின் பொறுப்பு, ஹம்பாலியின் முடிவு.

ஒரு பிரச்னை என்று பஷீரிடமோ, சுங்கரிடமோ போய் போராளிகள் நின்றால் 'பே' என்று முழிக்கத்தான் முடியும் அவர்களால். ஹம்பாலிதான் அங்கே தளபதி. அவருக்குத்தான் உத்திகளும் மாற்று உத்திகளும் தெரியும். ஆகவே, எந்த ஒரு பெரிய காரியத்தைத் திட்டமிட்டாலும் அந்தக் காரியத்தின் ஒரு பகுதியாக ஹம்பாலியை அடைகாப்பது என்பதும் இயல்பாக இணைந்துவிடும்.

ஏற்கெனவே இந்தோனேஷிய அரசு, ஜமா இஸ்லாமியா ஆட்களைச் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்த நிலையில், ஹம்பாலி எங்கே தங்குவார்? எப்படித் தொடர்பு கொள்ள முடியும்?

இன்றுவரை பெயர் தெரியாத ஒரு மூத்த ஜமா இஸ்லாமியா கமாண்டர் கொடுத்த யோசனை ஒன்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கிழக்காசிய நாடுகளின் வரைபடத்தை எடுத்து வைத்துக்கொண்டு, பாங்காக்குக்கு 75 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அயூத்யா என்கிற இடத்தை முதலில் குறித்தார்கள். ஹம்பாலி முதலில் அங்கே போய் இருக்க வேண்டியது. ஒரு பாதுகாப்பான இடத்தை அந்த இடத்தில் நிறுவுவது சிரமமில்லை என்று சகாக்கள் சொன்னார்கள். ஏற்கெனவே அயூத்யாவில் ஜமாவுக்கான நெட் ஒர்க் வலுவாக இருந்தபடியால், ஹம்பாலியை அங்கே தங்க வைத்துப் பராமரிப்பதிலோ, பிற பகுதிகளில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்வதிலோ பெரிய பிரச்னை வராது என்று முடிவு செய்தார்கள்.

அயூத்யா ஒரு சரித்திர நகரம். பதினான்காம் நூற்றாண்டு தொடங்கி பிரபலமாக இருக்கிற ஒரு கலாசார மையம். எப்போதோ ஒரு காலத்தில் கடல் கடந்து கிழக்கே போன இந்தியர்கள் அங்கே ராமாயணத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்க, அயோத்தியின் பாதிப்பில் அயூத்யா என்று பெயரிடப்பட்டதாக தாய்லாந்து சரித்திரத்தில் சிறு குறிப்பு ஒன்று காணக்கிடைக்கிறது. கோயில்கள் இருக்கின்றன. புத்த விஹாரங்கள் இருக்கின்றன. ஒருசில மசூதிகளும் தேவாலயங்களும் உண்டு. சுற்றுலாப் பயணிகள் எப்போதும் வந்து போகிற இடம்.

ஹம்பாலியும் அப்படித்தான் அங்கே போகத் திட்டமிட்டார், ஒரு சுற்றுலாப் பயணி போல. ஒரு விடுதியிலேயே வாடகை கொடுத்துத் தங்க வைக்க ஏற்பாடு செய்தார்கள். வாரத்துக்கு ஒரு விடுதி என்று பல மாதங்களை விடுதி வாசியாகவே கழிப்பதென்பது முடிவு.

அவர் அயூத்யாவுக்குப் போக இருந்தது 2003-ம் ஆண்டு மத்தியில். ஒரு வெடி விளையாட்டு நடத்திப் பார்க்க வாகாக, அந்த வருடம் அக்டோபரில் அங்கே சர்வதேச மாநாடு ஒன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. ஆசியா பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு என்று அதற்குப் பெயர் (Asia Pacific Economic Cooperation Summit). அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் தொடங்கி மொத்தம் இருபத்தியொரு நாடுகளின் தலைவர்கள் வர இருந்தார்கள்.

எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம்! வீணாக்குவதற்கு ஹம்பாலி என்ன முட்டாளா? ஆட்டத்தை அயூத்யாவிலிருந்தே தொடங்கிவிடுவது என்று முடிவு செய்தார். ஆனால் பாங்காக்குக்கு எப்படிப் போவது? மறுபடியும் உருளைக்கிழங்கு மூட்டையெல்லாம் சாத்தியமில்லை. விமானம் ஏறித்தான் போயாக வேண்டும். அபாய ஆட்டங்களைத் திரும்பத் திரும்ப ஆடிக்கொண்டிருக்க முடியாது. அவசரங்களுக்கு மட்டுமே அவை சரி.

எனவே, ஹம்பாலி போலியாக ஒரு ஸ்பெயின் நாட்டு பாஸ்போர்ட்டைத் தயார் செய்தார். தன்னுடன் மனைவியையும் இம்முறை அவர் அழைத்துச் செல்ல முடிவு செய்தார். ஹம்பாலியின் மனைவி ஒரு மலேசியப் பிரஜை என்பதால், அவருக்கு அந்த பாஸ்போர்ட்டே போதுமானதாக இருந்தது.

அயூத்யாவுக்குப் போய்விடுவது. அங்கே உட்கார்ந்து கொண்டு அந்த சர்வதேச மாநாடு நடக்கிற சமயத்தில் ஒரு தொடர் வெடிகுண்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவது. முடித்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு சிங்கப்பூர் வழியே மலேசியாவுக்குத் திரும்ப வந்துவிடுவது. மலேசியா முடியாவிட்டால் சீனா அல்லது மங்கோலியாவுக்குப் போய் கொஞ்ச காலம் இருந்துவிட்டு வரும் திட்டமும் இருந்திருப்பதாகத் தெரிகிறது.

அயூத்யா சம்பவம் திட்டமிட்டபடி நடந்துவிடுகிற பட்சத்தில், ஜமா இஸ்லாமியா போட்டு வைத்திருந்த அத்தனை திட்டங்களையும் அடுத்தடுத்துச் செயல்படுத்திவிடுவதில் எந்தப் பிரச்னையும் இராது என்று ஹம்பாலி நினைத்தார். தவிரவும், முன்னதாகத் திட்டமிட்டபடி நடத்தி முடிந்த பாலி குண்டு வெடிப்பையும் (ஜமா இஸ்லாமியா ஆரம்பித்த முதல் அத்தியாயத்தில் பார்த்தோமே, அது.) அது ஏற்படுத்தியிருந்த பதற்றத்தையும் அரசுகளுக்கு உண்டாகியிருந்த அச்சத்தையும் கணக்கில் கொண்டு பார்த்தால், ஜார்ஜ் புஷ் கலந்து கொள்ளும் மாநாடு நடைபெறும் இடத்தில் ஒரு தாக்குதல் என்பது மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஹம்பாலி கணக்கிட்டார்.

இதற்காகவே தமது மற்ற திட்டங்களைச் சற்று ஒத்திவைக்கும்படி சக போராளிகளுக்குச் சொல்லியிருந்தார்.

அந்த நாளும் வந்தது. ஹம்பாலியும் அவர் மனைவியும் திட்டமிட்டபடி மலேசியாவிலிருந்து புறப்பட்டு பத்திரமாகத் தாய்லாந்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சேரும்வரை எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால், பாங்காக் விமான நிலையத்தில் ஒரு தாய்லாந்து உளவாளியின் கண்ணில் ஹம்பாலி பட்டார்.

இத்தனைக்கும் ஹம்பாலி அப்போது மாறு வேடத்தில்தான் இருந்தார். எப்போதும் போல் டிரிம் செய்யப்படாமல் நீள வளரவிட்ட தாடி. மழமழவென்று அடித்த புதிய மொட்டை, வழக்கமான இஸ்லாமிய உடையில் அல்லாமல் கோட் சூட் போட்ட மேற்கத்திய கனவான் தோற்றம் என்று

அசப்பில் அவர் ஒரு மலேசிய வியாபாரிபோல் காட்சியளித்தார்.

இருந்தாலும் மேற்படி உளவாளிக்கு எங்கோ பொறி தட்டியது. இந்த முகம் தெரிந்த முகமாச்சே. எங்கோ பார்த்திருக்கிறோமே.

அவசர அவசரமாக ஏர்போர்ட் பிரவுசிங் செண்டருக்கு ஓடி, அலுவலக சகாக்களை மெசஞ்சரில் அழைத்தார். என்ன பேசியிருப்பார் என்பது யூகிக்கக்கூடியதுதான். தேடப்படும் பட்டியலில் இருக்கும் தீவிரவாதிகளின் புகைப்படங்கள் உடனே வேண்டும்.

அது ஒரு பெரிய காரியமா? அப்லோட் செய்தால் அப்படியே எடுத்துச் சாப்பிட வேண்டியதுதானே?

ஏழெட்டுப் படங்களைப் பார்த்து அவர், இறுதியில் ஹம்பாலி என்ற ரிதுவன் இஸ்ஸாமுத்தீனின் படத்தையும் ஏர்போர்ட் வாசலில் தான் பார்த்த மலேசிய வியாபாரியின் முகத்தையும் நினைவில் ஒன்று சேர்த்து ஒப்பிட்டு, மாட்டினாயா மவனே என்று வெளியே ஓடிவந்தபோது, ஹம்பாலி பாங்காக்கிலிருந்து புறப்பட்டு அயூத்யாவை நோக்கிப் போகத் தொடங்கியிருந்தார்.

அப்போது தப்பித்தால் என்ன? ஹம்பாலி வந்திருக்கிறார். தாய்லாந்துக்கு வந்திருக்கிறார். எதற்கு வந்திருப்பார்? நல்லுறவு வளர்த்துவிட்டுப் போகவா? கண்டிப்பாக ஏதாவது நாசகாரியமாகத்தான் இருக்க முடியும். அடடே, அண்ணன் ஜார்ஜ் புஷ் வேறு வருகிறாரே. ஒண்ணும் ஒண்ணும் கண்டிப்பாக மூன்றுதான்.

விஷயம் படு ரகசியமாகப் பராமரிக்கப்பட்டது. ஹம்பாலியை ஏர்போர்ட்டில் பார்த்த உளவாளிக்கும்; தாய்லாந்து உளவுத்துறை சீனியர் ஆபீஸர் ஒருவருக்கும் மட்டுமே ஹம்பாலி அங்கே வந்திருக்கும் செய்தி தெரியும். கவனமாக வளைத்துப் பிடிக்க முடிவு செய்தார்கள்.

ஒரு தனிப்படை உருவாக்கப்பட்டது. சுமார் அறுபது பேர் கொண்ட படை என்று கேள்வி. ஆதாரபூர்வத் தகவல் இல்லை இது.

அந்தப் படை மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பிரிவு, அயூத்யாவுக்குப் போனது. இன்னொரு பிரிவு, தேசத்தின் அத்தனை விமான முனையங்களிலும் முகாமிட்டது. மூன்றாவது பிரிவு, மொபைல் பிரிவு. இருபத்து நான்கு மணி நேரமும் தனியார் வாடகை டாக்சி எடுத்துக்கொண்டு ஊரெல்லாம் தேசமெல்லாம் சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்பது திட்டம்.

தாய்லாந்து காவல் துறைக்குக் கூட விஷயம் முதலில் தெரிவிக்கப்படவில்லை. அரசியல்வாதிகளுக்கு? மூச். ஒரு ஈ காக்கைக்குத் தெரியாமல் அப்படி அடைகாத்தார்கள். கோழியை அமுக்கிவிட்டு, பிறகு பிரியாணி போடலாமா, குழம்பு வைக்கலாமா என்று முடிவு செய்துகொண்டால் போச்சு. இப்போது என்ன அவசரம்?

ஒரு பக்கம் ஜார்ஜ் புஷ் கலந்துகொள்ளும் மாநாட்டுக்கான வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. மாநாட்டு அரங்கம், பாதைகள், மின்வசதி, தண்ணீர் வசதி, பாதுகாப்பு ஏற்பாடுகள் என்று ரெகுலராக நடைபெறும் பணிகள். அதற்கான ரெகுலர் காவல்துறை, உளவுத்துறை வேலைகள். அந்த உளவு டீமுக்கே இந்த விஷயம் தெரியாது.

இவர்கள் தனியே ஹம்பாலிக்கு வலை விரித்துவிட்டுப் பல் குத்திக் கொண்டிருந்தார்கள். இந்த விவரங்கள் எது குறித்தும் கவலைப்படாத ஹம்பாலி, ஒரு விடுதியில் வாடகைக்குத் தங்குவதுபோல் தங்கிக்கொண்டு, அங்கிருந்தபடியே ஒரு சிங்கிள் பெட் ரூம் அப்பார்ட்மெண்ட் ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கே வைத்துத் தம் திருப்பணிகளை ஆரம்பித்திருந்தார்.

அதாவது, தங்குவது விடுதியில். வேலை பார்ப்பது அந்த அப்பார்ட்மெண்டில். என்ன வேலை?

வெடிபொருள்களை வாங்கிச் சேகரிப்பது. ஆயுதமாக்குவது. துப்பாக்கிகளைத் தயார் செய்வது. வேண்டிய பிற உபகரணங்களைச் சேகரித்து வைப்பது. ஆள்களை அழைத்துப் பேசி, தயார் செய்வது, பயிற்சி வகுப்புகள் எடுப்பது. சொற்பொழிவாற்றி, உத்வேகப்படுத்துவது.

என்னதான் தன் கணவரின் தொழிலுக்குத் தோள் கொடுக்கிற மனைவி என்றாலும், ஹம்பாலியின் திருமதியான நொரால்விஸா லீ அப்துல்லா (Noralwizah Lee Abdullah) ஒரு பெண்தானே? பொழுது போகவில்லை என்று சில சந்தர்ப்பங்களில் மார்க்கெட்டுக்குப் போய்வரத் தொடங்கினார். இந்த விஷயம் ஹம்பாலிக்குத் தெரியாது.

மார்க்கெட்டுக்குப் போய் அவர் காய்கறிதான் வாங்கினாரோ, கசாப்பு வாங்கி வந்தாரோ தெரியாது. கண்டிப்பாகப் பிரச்னையை வாங்கி வந்துவிட்டார்.

அயூத்யா நகரமெங்கும் கொசு போல் நிறைந்து பரவியிருந்த தாய்லாந்து உளவுத்துறையினர், ஹம்பாலியின் மனைவியைப் பார்த்துவிட்டார்கள். ஒருமுறைதான் தவறவிடலாம். திரும்பத் திரும்பவா செய்வார்கள்?

நொரால்விஸாவுக்குத் தெரியாமல் அவரைப் பின் தொடர்ந்து சென்று அந்த சிங்கிள் பெட் ரூம் அப்பார்ட்மெண்டை நெருங்கிவிட்டார்கள். ஓஹோ, இதுதான் இடமா? ரொம்ப சரி.

அதற்குப்பின் யாரும் தாமதம் செய்யவில்லை. உடனடியாகக் காவல்துறைத் தலைவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதற்குள் விஷயத்தை மோப்பம் பிடித்துவிட்ட அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.வும் தன் படையுடன் இடத்துக்கு வந்து சேர, அத்தனை பேருமாக அப்பார்ட்மெண்டைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள்.

வழக்கமான எச்சரிக்கை அறிவிப்பு, அபாயச் சங்கொலி எல்லாம் கிடையாது. ஒன், டூ, த்ரீ. அவ்வளவுதான். கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சுட்டபடி பாய்ந்து ஹம்பாலியையும் அவரது மனைவியையும் சுற்றி வளைத்தார்கள். ஜீன்ஸும் டி ஷர்ட்டும் ஸ்டைலாக ஒரு தொப்பியும் அணிந்திருந்த ஹம்பாலி எந்த எதிர்ப்பும் காட்டாமல் சரணடைந்தார். ஏராளமான ஆயுதங்களும் வெடி மருந்துகளும் சில வரைபடங்களும் ஒன்றிரண்டு லேப்டாப்களும் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.

அன்றைக்கு ஆகஸ்ட் 11, 2003.

செப்டம்பர் 11, 2001 சம்பவம் நடந்த நாள் முதல் அவர்கள் ஹம்பாலியைத் தேடிக்கொண்டிருந்தார்கள். தேடியது வீணாகாத சந்தோஷம் தாய்லாந்து போலீஸுக்கு மட்டுமல்ல, சி.ஐ.ஏ.வுக்கும்தான்.

அதுதான். அவ்வளவுதான். ஹம்பாலி கைதானதுடன் ஜமா இஸ்லாமியாவின் ஏனைய திட்டங்கள் அனைத்தும் படுத்துவிட்டன. ஹம்பாலி எங்கே கொண்டுபோகப்படுகிறார் என்று கண்டுபிடிப்பதிலேயே அடுத்து வந்த நாட்கள் கழியத் தொடங்கின.